ஈஸ்ட் லண்டன் தஃவா சென்டரின் ஸ்பொன்சரில் அவர்களுடைய தஃவா சென்டருக்கு வந்திருக்கும் முப்தி உமர் ஷரீப் காசிமியவர்கள் ஜமாஅத்தே இஸ்லாமியுடன் சேர்ந்து தஃவா செய்கிறாராம்.

அவர் செயலுக்கு முற்றிலும் மாற்றமான பத்துவாவை அவரே கொடுத்துவிட்டு அதற்கு எதிராக அவரே நடந்து கொள்வது விந்தையாக உள்ளது.

அவருடைய அதிகார பூர்வ கடிதமும் ஜமாத்தே இஸ்லாமியுடன் சேர்ந்து அவர் செய்யப்போகும் தஃவாவுக்கான துண்டுப் பிரசுரத்தையும் இங்கே தந்துள்ளோம்.
மக்களே இவரை இனம் கண்டு கொள்ளுங்கள்

# DARUL HUDA

Quality Islamic Book Publication

#211(102), Linghi Street, Mannay, Chennai-600 001

Phone: 044-25247866, 98401 74121, 98844 69044


Date: 06.05.2011

அல்லாஹ்வின் பெயரால்..

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார், தோழர்கள் மீதும் நிலவட்டும்.

தாங்கள் எழுதிய கடிதத்தை முழுமையாக படித்தேன். அதன் இறுதியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய பதிலை கீழே எழுதியுள்ளேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் நல் வழிகாட்டுவானாக!

1. 'தப்லீக் ஜமாஅத்' என்ற பெயரில் செயல்பட்டு சில சீர்திருத்த காரியங்களை செய்து வருகிற மக்கள் குர்ஆன் சுன்னாவை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் சுன்னியத்திற்குரிய நபித்தோழர்கள், இமாம்கள் கூறாத சூஃபிச கொள்கைகளும் உண்டு. ஈமானைப் பற்றி பேசி வருகிற அவர்கள் ஈமானை முறித்துவிடுகிற சொல், செயல்கள் பற்றி முற்றிலும் அறியாதவர்கள்.

உணவு தூக்கத்தில் சுன்னத்தை பேண விரும்பும் அவர்கள், தொழுகை, நோன்பு, ஹஜ் இன்னும் இதர வணக்கங்களில் சுன்னத்தை புறக்கணிக்கின்றனர். தங்கள் ஆலிம்கள் கூறுவதை ஆதாரம் இன்றி பின்பற்றுகின்றனர். சத்தியத்தை புரிய முடியாதபடி அறியாமையில் இருக்கின்றர். அவர்கள் நல்ல குணமுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் நல்ல, சரியான கொள்கை உடையவர்கள் அல்லர்.

எனவே, குர்ஆன் சுன்னாவை மட்டும் ஆதாரமாக கொண்டும் ரசூலுல்லாஹ்வை மட்டும் இமாமாக கொண்டுமுள்ள முஸ்லிம்கள் தப்லீக் ஜமாஅத்துடன் சேர்ந்து மார்க்க பணிகளை செய்ய முடியாது. நமது கட்டுப்பாட்டில் உள்ள மஸ்ஜிதுகளில் அவர்களுடைய அமல்களின் சிறப்புப் புத்தகம் படிக்கவோ, அவர்கள் அமைப்பு சார்ந்து ஏனைய விசயங்கள் செய்யவோ அனுமதிப்பது வழிகேட்டிற்கு துணைப் போவதாகும். அவர்களை தொழ அனுமதிக்கலாம். குர்ஆன் சுன்னாவை படிக்க பேச அனுமதிக்கலாம். ஆனால் அவை அவர்களில் அதிகமானவர்களுக்குத் தெரியாது. ஏனைய இரண்டு கூட்டத்தவர்களும் (ஜமாஅத்தே இஸ்லாமி என்ற மவ்தூதியை இமாமாக கொண்டவர்களும் ஹிஸ்புத் தஹ்ரீர் என்ற அமைப்பும்) இவர்களைவிட வழிகெட்டவர்கள் என்பது சுன்னாவைப் பின்பற்றுகிற அறிஞர்களின் முடிவாகும். ஆகவே இவர்களுடனும் நாம் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்.

கவனிக்க! இது தவிர முஸ்லிம் உம்மத் என்கிற பெயரில் அவர்களும் இருப்பதால் அவர்களிடம் நாம் விரோதப் போக்கைகையாளாமல்,நெருங்கியநட்பும்வைக்காமல்பழகிசுன்னாவின்பக்கம் அழைத்தல்வேண்டும்.அவர்களுக்குஸலாம்கூறலாம். அவர்களில் எவரிடமாவது கொள்கையில் பெரிய ஷிர்க் இருந்தால் அல்லது அல்லாஹ் அர்ஷுக்கு மேல் இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்ளாமல் அல்லாஹ் எல்லா இடத்திலும் இருக்கிறான் என்று நம்பி இருந்தால் அவர்களுக்குப் பின் நாம் தொழக் கூடாது. அல்லாஹ் மிக அறிந்தவன்.

குர்ஆன் சுன்னா பணியாளன்

அ. உமர் ஷரீஃப்

தாருல் ஹுதா, சென்னை.

ISLAMIC DAWAH CENTRE

இஸ்லாமிய அழைப்புப் பணி மையம்
வழங்கும்

# இறுதி நபியின் இனிய அழைப்பு...

"எங்கள் இறைவனே! உங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஈமானின் பக்கம் அழைத்தவரின் அழைப்பைச் செவிமடுத்து நாங்கள் திடமாக ஈமான் கொண்டோம் "எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களை விட்டும் அகற்றி விடுவாயாக! இன்னும், எங்க(ளுடைய ஆன்மாக்க)ளைச் சான்றோர்களு(டைய ஆன்மாக்களு)டன் கைப்பற்றுவாயாக!"

அல்குர்ஆன் 3:193



## சிறப்புப் பேச்சாளர்கள்:

அஷ்ஷெய்க் அப்துல் காதர் மதனி
உஸ்தாத் R. ஹஜ்ஜுல் அக்பர்
அஷ்ஷெய்க் H.M. மின்ஹஜ்
முஃப்தி உமர் ஷரீஃப் காசிமி

## இன்ஷா அல்லாஹ்:

நேரம்: **3:00 pm to 9:00 pm**
நாள்: ஞாயிறு - **12th June 2011**

## இடம்:

Plashet School (*old building*)
Plashet Grove
Eastham, London E6 1DG

Poster designed by Fuaadh(.com)

இஸ்லாமிய மாநாடு - ஹிஜ்ரி 1432 அனைவரும் வருக!

Tel: 07860292199, 07727659783 | Email: info@idcuk.org | Web: www.idcuk.org

# இவர்கள் யார்?

அஸ்ஸலாமு அலைக்கும்

ஈஸ்ட் லன்டனில் அமைந்துள்ள தவ்வா சென்டர் யார்? (East London Dawah Centre )

லன்டனில் வாழும் தமிழ் பேசும் இந்திய இலங்கை மக்களால் கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்பு ஈஸ்ட் ஹேம் தவ்வா நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதனுடைய ஆரம்ப நிலைபாடு குர்ஆன் ஸுன்னாவுக்குட்பட்டதாக இருந்தது. காலப் போக்கில் இந்த நிலை மாறி அகீதாவில் முரண்பாடுள்ள இயக்கங்களின் ஆதிக்கம் மேலோங்கப்பட்டு சமரச தவ்வா நிலையமாக உருவமெடுத்துள்ளது. இதற்கான காரணம் இதில் இருக்கக் கூடிய முக்கிய பதவி வகிப்பவர்கள் குர்ஆன் சுன்னா போர்வைக்குள் இருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி கொள்கையை சார்ந்தவர்கள். இவர்கள் நாங்களும் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் தான் தவ்வா செய்கிறோம் என்பதை காட்டிக்கொள்வதற்கு குர்ஆன் சுன்னாவை கொள்கையாக கொண்ட மௌலவிமார்களை இலங்கையில் இருந்து அழைத்து வந்து அவர்களை கொண்டு மார்க்க செற்பொழிவுகள் நிகழ்த்த வைக்கிறார்கள். இவர்களும் ஒரு சில உலக லாபங்களுக்காக அவர்களுடய பிழைகளை அவ்விடத்தில் சுட்டிக் காட்டாது பூசி மொழுகிவிட்டு வருகிறார்கள். இவர்களுக்கு உதாரணம்

إِنَّ ٱلَّذِينَ يَكۡتُمُونَ مَآ أَنزَلَ ٱللَّهُ مِنَ ٱلۡكِتَٰبِ وَيَشۡتَرُونَ
بِهِۦ ثَمَنٗا قَلِيلًا أُوْلَٰٓئِكَ مَا يَأۡكُلُونَ فِي بُطُونِهِمۡ إِلَّا ٱلنَّارَ وَلَا
يُكَلِّمُهُمُ ٱللَّهُ يَوۡمَ ٱلۡقِيَٰمَةِ وَلَا يُزَكِّيهِمۡ وَلَهُمۡ عَذَابٌ
أَلِيمٌ ١٧٤

எவர்கள் வேதத்தில் அல்லாஹ் இறக்கியவைகளை மறைத்துவிட்டு அதற்கு விலையாக சொற்ப தொகையைப் பெற்றுக் கொள்கின்றனரோ அவர்கள் நிச்சயமாக தங்கள் வயிற்றில் நெருப்பையே நிரப்பிக் கொள்கின்றார்கள்.அன்றி மறுமையில் அல்லாஹ் அவர்களுடன் (விரும்பிப்) பேசவும் மாட்டான். அவர்களை (மன்னித்து)ப் பரிசுத்தமாக்கி வைக்கவும் மாட்டான். அவர்களுக்கு மிக்க துன்புருத்தும் வேதனைதான் உண்டு.

أُوْلَٰٓئِكَ ٱلَّذِينَ ٱشۡتَرَوُاْ ٱلضَّلَٰلَةَ بِٱلۡهُدَىٰ وَٱلۡعَذَابَ
بِٱلۡمَغۡفِرَةِۚ فَمَآ أَصۡبَرَهُمۡ عَلَى ٱلنَّارِ ١٧٥

இவர்கள்தாம் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டையும் மன்னிப்புக்கு பதிலாக தண்டனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். (நரக)ரெருப்பை (இவ்விதம்) அவர்கள் (சுவைத்து) சகிக்கும்படிச் செய்தது எதுவே?

நபிவழிக்கு முற்றிலும் மாற்றமான இத்தகைய சமரச தவ்வா செய்வதால் தான் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அழைப்புப் பணி நிலையம் இன்று அதற்கு முற்றிலும் மாற்றமான கொள்கையாளர்களின் கைப்பிடிக்குள் சிக்கிவிட்டது. தற்போதுள்ள நிலமையில் இந்த நிலையத்தால் ஏற்பாடு செய்யப்படும் தவ்வா நிகழ்ச்சிகளில் அவர்களோடு சமரசம் செய்து குர்ஆன் சுன்னா கொள்கையில் உள்ள மௌலவிமார்களும் மார்க்க உரைகள் நிகழ்த்தும் போது குர்ஆன் சுன்னா மௌலவிமார்கள் ஜமாத்தே இஸ்லாமியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும். மக்களையும் ஜமாத்தே இஸ்லாமியின் கொள்கைகள் சரியாகத்தானே இருக்கும் அதனால் தானே குர்ஆன் சுன்னாவில் உள்ள மௌலவிமார்களே அவர்களை ஏற்றுக்கொண்டுள்ளார்களே என்று எண்ணச் செய்து வழிதவறச் செய்து விடும். மேல்கொண்டும் இதே நிலைமையை நீடிக்காமல் அந்த நிலையத்தை குர்ஆன் சுன்னாவின் கீழ் கொண்டு வருவதற்கு தௌஹீத் மௌலவிமார்கள் அவர்கள் ஜமாத்தே இஸ்லாமியின் கொள்கையிலிருந்து விடுபடும் வரை எந்த பங்களிப்பும் செய்யாதிருப்பதே சிறந்தது. அப்படியும் அவர்கள் விடுபடாதவிடத்து அந்த நிலையத்தை ஜமாத்தே இஸ்லாமி நிலையமாக முத்திரை இடவேண்டும். இங்கிலாந்திலும் இலங்கையிலும் குர்ஆன் சுன்னாவில் உள்ள அமைப்புகள் எவரும் இந்த நிலையம் ஜமாத்தே இஸ்லாமியின் பிடியிலிருந்து விடுபடும்வரை இவர்களது எந்தவொரு விடயத்திலும் பங்கு கொள்ளாது தவிர்ந்து விட வேண்டும்.

British Sri Lanka Moors AssociationNo 2 Park Road London EN5 5RN E-Mail association@srilankamoors.com